www.tamilarangam.net

விலை ரூபா 10.00

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

ஆவணி 2000

இதழ்-17

"...கொழும்புல வீடும், கொஞ்சக்காசும் தான், கடைசியில நம்மட உரிமைகளுக்கு அவங்கள் கொடுக்கிற விலபோல. அவங்கள் ஏலம் போடறாங்களென்டால், இவங்களுக்கும் சொரணையில்லாம போயிட்டுதா..."

## அரசியல்யாப்பு ஒரு பாரிய சதி: ஒன்றுபட்டு அதை முறியடிப்போம்!

மற்றெல்லா சிங்கள தலைவர்களையும் விட நெஞ்சுரம் கொண்டவராக வர்ணிக்கப்படும் சந்திரிகாவும், அவரது அரசும் ஒரு சொற்ப காலத்திற்குள் தம் நெஞ்சுறுதியை நிரூபிக்க எத்தனையோ அரசியல் யாப்புகளையும் தீர்வுப்பொதிகளையும் முன்வைக்க வேண்டியதாயிற்று. 95 இல் ஒன்று, அதனை சீவிச்சிதைத்து 97 இல் ஒன்று, நேற்று 2000இல் இரு சிங்கள கட்சிகளும் "இணைந்து" முன்வைக்கவிருந்தது ஒன்று, தற்போது மீண்டும் 97 நோக்கி வேகப்பாய்ச்சல் என்ற அறிவிப்புடன் இன்னொன்று.

தேசியப்பிரச்சனையை தீர்க்கும் விதத்தை பாருங்கள். இலஞ்சமாய் பல இலட்சம் பணம், கொழும்பில் வீடுகள், மந்திரி பதவிகள் எனத் தள்ளி எதிர்கட்சி உறுப்பினர்களை விலைக்கு வாங்கியும், அரசாங்க உறுப்பினர்களை கைதிகளாக அடைத்து வைத்தும், பாராளுமன்றத்தை முப்படைகள் கொண்டு இரவும்பகலும் பாதுகாத்தும் சந்திரிகா அரசு தன் சதித்திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய பரிதாபநிலை. பிறிதொரு தேசத்தை அடிமைப்படுத்தும் ஒரு தேசம் தன்கால்களில் தானே அடிமைச்சங்கிலியைப் பூட்டிக் கொள்கின்றதென்ற மார்க்சின் பிரபலமான வார்த்தைகள் மீண்டும் மீண்டும் மெய்ப்பிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியாக இன்னும் ஒரு ஆறுவருடம், அதன் பின்பு பிரதமராக ஒரு ஆறுவருடம் என ஆட்சியை சுவைத்துப்பார்த்துவிட சந்திரிகா என்ன பாடுபடுகின்றார் என்பது நம் தமிழீழ பிரஜைகளுக்கு மட்டுமல்ல, சிறிலங்கா பிரஜைகள் ஒவ்வொருக்கும் கூட புரிந்த விடயமாகிவிட்டது. இந்த புதிய அரசியல் யாப்பிற்குள் தமிழ் மக்களின் தேசியப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் பொதி வைக்கப்பட்டிருப்பதாக நாடகம் வேறு அரங்கேற்றப்பட்டுள்ளது.

பதினைந்து வருடங்களுக்கு முன்பு நமது தேசிய விடுதலைப் போராட்டம் ஆயுதம் தாங்கிய தீவிர வடிவம் பெற்ற அதன் ஆரம்ப நிலையில் முன்வைக்கப்பட்டதுதான் ஈழத்தமிழரின் திம்பு மாநாட்டு கோரிக்கைகள்: நம் தேசிய அடையாளத்தை பொறிக்கவும், ஒரு பேச்சுவார்த்தைக்கான ஆரம்ப அடித்தளமாகவும் வைக்கப்பட்டவை- தான் அவை: ஈழத்தமிழரின் தனியான தேசியஇனத்துவம், பொதுவான தாயகம், சுயநிர்ணய உரிமை : அன்று நமது மூலாதாரக் கோரிக்கைகளாக இருந்து இந்த மூன்று அம்சங்களையும், இதே சந்திரிகா 95 இல் பரபரப்பாக முன்வைத்த தீர்வுப் பொதியானது நெருங்கி வரவே இல்லை என்பதால், அத்தீர்வுப்பொதி அன்றே தூக்கியெறிப்பட்டு விட்டது. இப்போது நம்தேசம் அதன் விடுதலையின், சுதந்திரத்தின் இனிய காற்றை அனுபவிக்க காத்திருக்கின்ற ஒரு தருணத்தில்....

94ம் ஆண்டுப் பொதியின்

(தொடர்ச்சி 7ஆம்பக்கம்)

## 'சிகள உறுமய' யினுள் கொலையாளிகள்!

80 களின் இறுதிப்பகுதியில் படைத்தளபதியாக இருந்து பல்லாயிரம் இளைஞர்களை வேட்டையாடிய முன்னாள் படைத்தளபதி ஆனந்த வீரசேகர தற்போது கைதுசெய்யப்பட்டு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த 10 வருடங்களாக சந்திரிகாவின் ஆணைப்படி ஈழத்தமிழருக்கு எதிராக அடக்குமுறைகளை கட்டவிழ்த்து பல கொலைகளுக்குப் பொறுப்பாக இருந்து பின்பு ஓய்வுபெற்ற ஒருவர். அண்மையில், "சிங்கள வீரவிதான அமைப்பை" தொடக்கி, தற்போது "சிகள உருமய" (சிங்கள உருமய) சிங்களஇனவெறிக் கட்சியின் முக்கியஸ்தராக தீவிரமாக செயற்பட்டு வரும்போது இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரைப்போன்றவர்களும், இன்னும் பல கொலைப்படையாட்களும் இதுவரை ஈழத்தமிழரை வேட்டையாடியவர்களும், தற்போது போர்முனையிலிருந்து தப்பியோடிவந்தவர்களும் சிகல உருமய போன்ற சிங்கள தீவிரவாத அமைப்புகளின் பின்னே நின்கின்றனர். பாசிச இனவெறி அமைப்புக்குள் புகுந்து கொண்ட இவர்கள் தொடர்ந்தும் ஈழத்தமிழர், முஸ்லீம்மக்கள் மற்றும் மலையக தமிழருக்கு எதிராக திட்டமிட்டு செயற்பட்டும் வருகின்றனர்.

இதுவரை காலமும் சந்திரிகா அரசின் மேலான கட்டளைகளுக்கு பணிந்து தமிழரை வேட்டையாடி வந்த இந்த கும்பலானது தற்போது தமது கொலைக் குற்றங்களை மறைக்கவும், உயிர்களை பாதுகாத்துக்கொள்ளவும். இனவெறிச் செயல்களில் ஈடுபடவும் சிகள உருமய கட்சிக்குள் ஒளிந்து கொண்டதுடன், சந்திரிகா கூட்டணிக்கு அரசியல்போட்டியாகவும் செயற்பட முயன்றுள்ளனர். இது 'சமாதானப்புறாவிற்குப்' பிடிக்கவில்லை. மேலும் போரில் ஈடுபட வேண்டிய பல படையாட்களும் தப்பியோடிவந்து சிகள உருமயவிற்கு பின்னே ஒளிந்துகொண்டது போர்முனையை பலவீனப்படுத்தும் இன்னுமொரு பிரச்சனையாகவும் ஆகி விட்டது. இதன்விளைவாக தற்போது இவர்களை வேட்டையாடுவது முடுக்கிவிடப்பட்டுள்ளது. இதுவரை தனது பணிப்புரைகளின் கீழ் தமிழரை வேட்டையாடிய இந்த கொலையாட்களை பாதுகாத்து வந்த சந்திரிகா, யூஎன்பி காலத்தில் நடந்த நேற்றைய மனிதஉரிமை மீறல்களை காட்டி, தனது இன்றைய மனிதஉரிமை மீறல்களை மறைக்கின்றார். சந்திரிகா அரசின் இரட்டைத்தன்மைக்கு இதுவும் ஒரு சான்று.

## திட்டமிட்டே சட்டங்களை மீறும் சந்திரிகா

தணிக்கை அதிகாரி நியமிக்கப்பட்ட விதம் அரசியல்யாப்பை மீறிய செயலென உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்தது. இவ்வாறு மீறியது யார்? சிங்கள அரசுத்தலைவர் சந்திரிகா. இதற்கு என்ன தண்டனை அவருக்கு? எதுவுமில்லை. வேறு எவரேனும் இந்த அரசியல்யாப்பை எவ்வாறேனும் மீறினால் கதி என்ன? அவர்களின் அரசியல் யாப்பின் 6ம் சரத்தை நாம் மீறினால் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் சிக்க வைக்கப்படுவோம். ஆனால், அதே அரசியல்யாப்பு சட்டத்திற்கு முன்பு அனைவரும் சமமானவர்கள் என்று பகர்கின்றது.

இரண்டு வருடங்களுக்கு எதிர்கட்சிகளின் வசம் இருந்த ஐந்து மாகாண சபைகளை உரிய காலத்திற்கு முன்பு சந்திரிக்கா கலைத்தார். அதுவும் அரசியல் யாப்பை மீறும் செயல்என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதற்கும் சந்திரிகாவிற்கு என்ன தண்டனை தரப்பட்டது? எதுவுமில்லை. காரணம் அவர் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர். இந்த ஒருவருக்கு மட்டும் சட்டத்திற்கு அப்பால் கடவுள் அந்தஸ்து வழங்கும் அரசியல் யாப்பை சிங்கள தேசம் எப்படி சகித்துக்கொள்கின்றது? அவர்கள் சகித்துக்கொள்கின்றார்கள் என்பதற்காக நாமும் ஏன் சகித்துக்கொள்ள வேண்டும்? அவர்கள் இந்த ஜனநாயகமீறலை சகிக்க ஒரே காரணம், சகல அதிகாரமும் கொண்ட இந்த முறைமையானது ஈழத்தமிழரை நசுக்கவும் விடுதலைப் போராட்டத்தை தகர்க்கவும் நன்கு பயன்பட்டு வருகின்றது என்று அவர்கள் கருதுவதனால்தான்.

தணிக்கை அதிகாரி தொடர்பான, உயர்நீதி மன்றத்தீர்ப்புக்கேட்டு, ஜனநாயகவாதிகளும், பத்திரிகை உலகத்தோரும் மகிழ்ச்சியையும் உணர்ச்சிக் கொந்தளிப்பையும் வெளிப்படுத்தினர். நல்லது. அதே சமயம், வடதமிழீழத்தில் தடைசெய்யப்பட்ட உதயன் பத்திரிகையின் நிலை கேட்பாரற்றதாக இருந்தது ஒரு புறம் இருக்க, வெற்றியின் குதூகலத்தில் ஒரு உண்மையை பலரும் மறந்துவிட்டனர். ஆட்சியில் இருக்கும் கும்பல்கள் இந்த சட்டங்களை வேண்டுமென்றே மீறுகின்றனர் என்பதே அந்த உண்மையாகும்.

பாதிக்கப்பட்டவர்கள் வழக்கு தாக்கல்கள் செய்து, எதிரிகள்தரப்பு எதிர் மனுக்களால் அதற்கு தடைகள் இட்டுக் காலத்தை இழுத்தடித்து, பின் வழக்குகள் நடந்து முடிவு வருவதற்கிடையில் தாம் நினைத்த காரியத்தை எதேச்சாதிகார

(தொடர்ச்சி 5ஆம்பக்கம்)

www.tamilarangam.net

# போராட்டத்தில்
# நமது மக்களின் பொருளாதார பங்களிப்பு

நம் தேசமானது நீண்ட கால ஆக்கிரமிப்பின் கீழும், கொடுமையான யுத்த நெருக்கடியிலும் வைக்கப்பட்டும், பொருளாதார தடையென்ற கூட்டுத் தண்டனை கொண்டும் சிங்கள இனவாத அரசினால் நசுக்கப்பட்டு வருகின்றது. நிச்சயமற்ற வருவாயை, அதுவும் மிகக்குறைந்த மட்டத்தில், பல்வேறு உயிராபத்துகளுக்கு மத்தியில் பெறக்கூடிய நிலையில் நமது தேசம் வைக்கப்பட்டுள்ளது.

அடுத்தடுத்து வருமான இழப்பு, வாழ்க்கைச் செலவின் சுமை, போதிய வருமானம் இன்மை காரணமாக தேசத்திலுள்ள ஒவ்வொரு பிரிவினரதும் சேமிப்பு அரிதாகி, இன்று எதிர்காலம் குறித்த கேள்வி மக்களை பலமாக ஆட்டுவித்தபடி உள்ளது. சிறிலங்கா அரசானது நம்மீது திணிக்கப்பட்டுள்ள யுத்தத்திற்கான செலவினங்களை பல்வேறு விதத்திலும் நம்மிடமே கறந்து வருகின்றதால் நமது மக்களின் வாழ்நிலை மேலும் அவல நிலைக்குத் தள்ளப்படுகின்றது. இப்படியான காரணங்களினால், தற்போது நமது மக்களில் மிகப்பெரும் பகுதியினர் பொருளாதார ரீதியில், மிகவும் அடிமட்ட நிலைக்கு தள்ளப்பட்ட நிலையில் உள்ளனர். சுருங்கக்கூறின், எக்கணமும் உயிராபத்து அச்சுறுத்த, அடுத்த நாளுக்கும், அடுத்த வாரத்திற்கும் வருவாய்க்கு என்ன செய்வதென விழி பிதுங்கி நிற்பதே பெரும்பாலானோர்கள் நிலை. கையிலுள்ள அற்ப சேமிப்பும் தீர்ந்து விட்டால் அடுத்து என்ன செய்வது என திக்கித்திணறியபடி நமது மக்கள் தமது வாழ்வை ஓட்டி வருகின்றனர்.

இப்படிப்பட்ட கடுமையான நெருக்கடிகளுக்கும் மத்தியில்தான் நமது மக்கள் தேசிய விடுதலைப்போராட்டம் நின்று நிலைக்கவும் பலம்பெறவும் நிதி மற்றும் பொருளாதார பங்களிப்புகளை இடைவிடாது அளித்து வருகின்றனர். போராட்டத்தின் மூலாதாரமாக இருந்தும் செயற்பட்டு வருகின்றனர். அடுத்த வேளை உணவிற்கு கூலிவேலையில் ஈடுபடுவோர் தொடக்கம் புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள ஈழத்தமிழர் வரை போராட்டத்திற்கான பங்களிப்பானது விரிந்ததாக அமைகின்றது.

நீண்ட கால தொடர்ச்சியான யுத்தமானது இவ்வாறாக நமது மக்களின் வாழ்வியல் போக்குகளை பலமுனைகளிலும் சிதைத்து சின்னாபின்னமாக்கியுள்ள போதிலும் மக்களின் அரசியல் உணர்வும், தேசிய ஒருமைப்பாடும் மக்கள் மத்தியில் பல் வேறு ஏற்ற இறக்கங்களுக்கூடாக தொடர்ச்சியாக அதிகரித்தே வருகின்றது. முன்னெப்போதையும்விட எமது தேச விடுதலைப் போராட்டத்தில் மக்களது ஆதரவும் பங்குபற்றலும் இன்று அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்த வெற்றிகரமான அடைவுகளுக்குப்பின்னே, நமது தேசம் நம்பமுடியாத அளவுக்கு இழப்புகளை கடந்து வந்துள்ளது. அர்ப்பணிப்புகளை செய்துள்ளது. அனைத்து முனைகளிலும் தேசத்தின் வளங்கள் இழக்கப்பட்டுள்ளன. கசக்கிப்பிழியப்பட்டுள்ளன. உயிர் இழப்புகள் அடங்கலாக, பல்வேறு வதைகளையும் வடுக்களையும் தேசம் தாங்கி நிற்கின்றது. தற்போது நமது தேசம் முக்கியமானதொரு கட்டத்தை கடக்கும் நிலையை வந்தடைந்துள்ளது. இதன் வெற்றியில் தான் நம் இறுதி இலட்சியம் ஒட்டுமொத்த தேசவிடுதலை அடையப் பெறுவதும் தங்கியுள்ளது.

சிறிலங்கா அரசினால் அரை நூற்றாண்டுகளாக மிகவும் பின்தங்கிய நிலையில் திட்டமிட்டு வைக்கப்பட்டிருந்த போதிலும், நம் தேசம் தன்னளவில் கடினஉழைப்பு மற்றும் சேமிப்புக்கள் காரணமாக காத்திரமான மூலதனத்திரட்சியை பேணிக்கொண்டு தன் சமூக இயங்குநிலையை தக்க வைத்துக்கொண்டு வந்தது. விடுதலைப் போராட்டத்தின் நின்று நிலைப்புக்கும் வெற்றிக்கும் இந்த பண்பானது குறிப்பிடத்தக்க பாத்திரத்தை ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

தற்போது போர் சூழலின் கடுமை மற்றும் நிச்சயமற்ற நிலையிலும் கூட மக்கள் தமது பொருளாதார பங்களிப்பை போராட்டத்திற்கும் போராட்ட அமைப்புகளுக்கும் பிரதானமாக விடுதலைப்புலிகளுக்கும் வழங்கி வருகின்றனர். தொடர்ந்தும் வழங்குவர். இப்பங்களிப்புகளானது நேரடியாகவும் மறைமுகமாயும் பிரதானமாக விடுதலைப் புலிகளால் பெறப்படுகின்றது. மக்களின் பல்வேறு போராட்டப் பங்களிப்புகளில் இதுவும் ஒன்றாகும். அரச படைகளின் ஆக்கிரமிப்பின் கீழுள்ள பகுதி மக்களும்கூட, இந்த பங்களிப்பை தவறாது செய்து வருகின்றனர்.

இப்படிப்பட்ட மக்களின் பங்களிப்பைப் பெறுவது என்பது மக்களின் சம்மதத்துடனான உற்சாகமான இயல்பான பங்களிப்பாக இல்லாது, அவர்களால் தாங்கமுடியாத அளவிற்கும் சகிக்க முடியாத அளவிற்கும் அவர்களிடம் இருந்து கசக்கிப்பிழிய முனையும் போது, மக்களின் பங்களிப்பு பண்பில் ஒரு எதிர்மறை தன்மை ஏற்பட்டு விடுகின்றது.

தற்போது நமது மக்கள் மிகுந்த பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும், பாதுகாப்பு கருதி இடம்பெயரும்படி விடுதலைப் புலிகள் கேட்கும் போதெல்லாம் ஒத்துழைக்கின்றனர். மேற்படி விடயங்களைக் கணக்கில் எடுக்காது, மக்களின் கடினங்களைப் புரியாது விடுதலைப்புலிகள் மக்களிடம் இருந்து மக்களால் செலுத்தமுடியாத அளவிற்கு தொகையை நிர்ணயித்து அவற்றை போராட்டத்திற்கான பங்களிப்பாகத் தந்தேயாக வேண்டும் என நிர்ப்பந்திக்கின்றனர். மறுப்பவர்களுக்கு தண்டனைகளும் அளிக்கின்றனர். இச்செயற்பாடுகள் மக்களின் போராட்ட பங்களிப்பில் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை நாம் கவனிக்க வேண்டியுள்ளது. புலிகள் தமது உடனடித் தேவைகளில் இருந்து நிதிப்பங்களிப்பை அளவிற்கதிகமாக எதிர்பார்ப்பதும் மக்களால் அது முடியாத போது, மக்களை பணயம் வைப்பது துன்புறுத்துவது என்கின்ற அளவிற்கும் சென்றுவிடுவது வழமையாகி விட்டது. இதுவே போராட்டப்பங்களிப்பில் மக்களின் ஒரு பகுதியினரின் ஆர்வங்குறைந்த நிலைக்கான காரணங்களில் ஒன்றாகும்.

இவ்வகை நிலைமைகள் மக்களால் சகிக்க முடியாத அளவிற்கு செல்லும்போது, போராட்ட அமைப்பிற்கும் மக்களுக்கும் இடையிலான உறவானது மோசமடைந்து பகைமை அளவிற்கு தீவிரமடைகின்றது. இது போராட்டத்தை அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியிலும் பாதிப்பிற்குள்ளாக்குகின்றது. இதற்கு நிறைய சான்றாதாரங்களை நமது போராட்டத்தில் நாம் காண முடியும். எமது தேசவிடுதலையில் எதிரிகளும் இதனையே எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கின்றனர் என்பது ஒன்றும் எமக்குப் புதிய விடயமல்ல. இதைவிட மோசமான ஆபத்து நீண்டகால அடிப்படையில் விடுதலைப் போராட்டதிற்கு ஏற்படுகின்றது என்பதை நாம் பிரதானமாக கவனிக்க வேண்டியுள்ளது.

விடுதலைப்புலிகளின் கடுமையான வரிவசூலிப்பு கொள்கை காரணமாக, தற்போது மக்கள் வருவாய் தரக்கூடிய தொழில்கள் மற்றும் சிறு உற்பத்திகளில் ஈடுபடுவதில் அக்கறைகாட்டாமல் விடுகின்றனர். கடுமையாக உழைத்து பெறும் அற்ப வருவாயையும் புலிகளிடம் பறிகொடுப்பதை விட பேசமல் இருந்து கிடைப்பதை சாப்பிட்டு கொள்ளும் மனோநிலையை அடைந்து வருகின்றனர். கடும் உழைப்பு மற்றும் ஆபத்துக் காரணிகளை எதிர்கொண்டு வருவாய் தரக்கூடிய தொழில்களில் ஈடுபடுவதை தவிர்க்க முயல்கின்றனர். இது ஒட்டுமொத்தில் தேசத்தின் வருவாய் மற்றும் உற்பத்தி துறைகளில் வீழ்ச்சியை ஏற்படுத்தி மேலும் தேசத்தை வறுமையாக்குகின்றது. தேசத்தின் மூலதனத் திரட்சியை கடுமையாகப் பாதிக்கின்றது. இவ்வாறாக கண்ணுக்குப் புலப்படாது, ஆனால் ஒரு ஆபத்தான போக்கு தற்போது பரவலாகத் தோன்றிப் பலம் பெற்று வருகின்றது.

வரலாற்றில் இருந்து நாம் ஒரு உதாரணத்தை கவனத்தில் கொள்வது இங்கு பயன்தரும். முன்னாள் சோவியத் யூனியன், முதலாளித்துவ உலகிற்கு போட்டியாக கைத்தொழில் துறையில் தானும் மேல்நிலை அடைய வேண்டும் என்ற நோக்கில், விவசாயத் துறையை கசக்கிப்பிழிந்து அத்துறையில் ஈட்டப்பட்ட மூலதனத் திரட்சியை பறித்து தொழில்துறைக்கும் மற்றும் அரச இயந்திரத்தை வலுப்படுத்துவதிலும் பயன்படுத்தியது. இதன் காரணமாக காலப்போக்கில் விவசாயிகள் தமது உழைப்பிலும் உற்பத்தியிலும் ஊக்கமிழந்து அவற்றை படிப்படியாக கைவிடத்தொடங்கினர். ஈற்றில் சோவியத்யூனியனில் பஞ்சம் தலைவிரித்தாடும் நிலையும் உணவிற்காக முதலாளித்துவ உலகிடமே கையேந்தவேண்டிய பரிதாப நிலைக்கும் சென்றது. பின்னர் அனைத்து துறைகளுமே பலவீனமடைந்து மக்களுக்கும் அரசு மற்றும் கட்சிக்கும் இடையிலான உறவு பகைமையாகி சோவியத்யூனியனின் வீழ்ச்சிக்கே வழிவகுத்தது. சோவியத் சரிந்து விழும் வரையிலும் அதற்குள் அழுகி கோறையாகிக்கிடந்த இந்நிலைமையை எவரும் கவனிக்காமலே இருந்ததுடன் அவ்வப்போது எழுந்த முரண்பாடுகளை அதிகாரக்கரம் கொண்டு நசுக்க முயன்று ஈற்றில் அதுவும் படுதோல்வியில் முடிவடைந்தது. இதையொத்த நிலைமையை நாம், சிங்கள இனவாத அரசின் பக்கமும் தெளிவாக அவதானிக்கலாம்.

இப்படிப்பட்ட நிலைமை நமது தேச விடுதலைப் போராட்டத்திற்கும், நமது தேசத்திற்கும் நடந்து விடக்கூடாது. அவ்வகையில் போராட்டத்தினை இன்று எண்ணற்ற அர்ப்பணிப்புகளுடனும் பல வெற்றிகளுடனும் நடாத்திவரும் விடுதலைப்புலிகளுக்கு மேற்படி விடயங்களை சுட்டிக் காட்டும் அக்கறை சக விடுதலைப்போராட்ட அமைப்பு என்ற வகையில் எமக்கு உள்ளது.

இவற்றைக் கருத்தில் கொண்டு எமது தேசத்தின் வளம் மற்றும் ஆற்றல்களைக் கவனத்தில் கொண்டதாக பொருளாதாரக் கொள்கைகள் வகுப்பதன் மூலம் எமது தேச மக்களின் உச்சப் பங்களிப்பையும் எமது தேசத்தின் சுய பொருளாதாரத்தையும் கட்டியமைக்கலாம். அவ்வாறாக கட்டியமைப்பதை இன்றே இப்போதே தொடங்குவோம்!

தருமு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நம் அரசியல் பிரதிநிதித்துவம் பறிக்கப்படுகிறது!

தென்தமிழீழத்தில் தமிழ், முஸ்லீம் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை நிர்மூலம் செய்வதில் இரு பிரதான சிங்கள கட்சிகளும் வழமைபோல இப்பொதுத்தேர்தலிலும் சதி முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. பணமும் பதவிகளும் இதற்கென கைமாற்றப்பட்டுள்ளன. ஊர்ப்பற்றுகளும், குடும்பப்பற்றுகளும் இந்த சதி முயற்சிகளை இலகுபடுத்துகின்றன. தமிழ் கட்சிகளுக்குள் உள்ள முரண்பாடுகளும், கட்சிகளுக்கிடையில் காணப்படும் முரண்பாடுகளும் சிங்கள கட்சிகளால் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறாக உள்ளூர் தமிழ்மக்கள் பிளவுபடுத்தப்பட்டு, சிங்கள வாக்கெண்ணிக்கை கொண்டு, அதிக சிங்கள பிரதிநிதித்துவம் வெல்லப்படுகின்றன.



சென்ற பொதுத்தேர்தலில் 26 ஆக அமைந்திருக்க வேண்டிய தமிழ் பிரதிநிதித்துவம் 16 ஆக வீழ்ச்சியுற்றதற்கு இந்த அகப்பிளவுபடுத்தல்கள் முக்கிய காரணமாகும். இவ்வாறே முஸ்லீம்மக்களின் பிரதிநிதித்துவ எண்ணிக்கையை முஸ்லீம்கொங்கிரஸ் சிங்கள கட்சிகளுக்குப்பறிகொடுத்தது. இருந்தும் தமிழ், முஸ்லீம் கட்சிகள் மீண்டும் மீண்டும் அதே சிங்கள அரசாங்கங்களை மாறிமாறிப்பலப்படுத்துவது ஒரு முரண்நகைதான்.

டி.எஸ்.சேனநாயக்க நம் தாயகத்தில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை உருவாக்கத்தொடங்கியதன் பிரதான காரணம் தமிழ், முஸ்லீம் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை, அரசியல் அதிகாரத்தை பறிமுதல் செய்வதற்கேயாகும். இவரும் இவரின்பின்வந்தோரும், பாராளுமன்றில் சிங்கள உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்து, சிங்கள ஆதிக்க அரசயந்திரத்தை பலப்படுத்துவதற்கான அனைத்து சட்டங்களையும் பாராளுமன்றில் நிறைவேற்றிக் கொண்டனர். மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொண்டு, புதிய அரசியல்யாப்பு திருத்தங்களை கொண்டு வந்தார்கள். ஒவ்வொரு சட்ட மூலமூம், ஒவ்வொரு புதிய அரசியல் யாப்பும் நம் அரசியல் உரிமைகளையும் அடிப்படை மனித உரிமைகளையும் பறித்துக்கொண்டது. இதுவே ஈற்றில் இரத்தம்சிந்தி எமது சுதந்திரத்திற்காக போராட வேண்டிய வரலாற்றுக் காரணமானது.

பிரித்தானியர் இங்கிருந்து வெளியேறும் போது, அரசானது சிங்கள ஆளுங்குழமத்தின் எதிர்பார்ப்புகளை வேகமாக பூர்த்தி செய்யும் அளவிற்கு பலமானதாக இருக்கவில்லை. அன்று இடதுசாரிகளினதும் ஈழத்தமிழ், முஸ்லீம் மற்றும் மலையக தமிழ் மக்களின் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் கணிசமான பலத்தைக் கொண்டிருந்தனர். இதன் மூலம் அவர்கள் சிங்கள ஆளுங்குழமத்தின் சிங்களசோவினிச மேலாதிக்க நோக்கத்தை ஓரளவிற்கு மட்டுப்படுத்தி வந்துள்ளனர். முதல் தாக்குதலாக, சேனநாயக்க தலைமையில், 48 இல் மலையக தமிழரின் அரசியல் பிரதிநிதித்துவம் இல்லாதொழிக்கப்பட்டது. சிங்கக்கொடியை அனைவரதும் கொடியாகத்திணிக்க, அன்று நடைபெற்ற விவாதங்களின் போது, இன்னும் தாம் பலவீனமாயிருப்பதை உணர்ந்து கொண்ட சிங்கள ஆளுங்குழமம் அதன் பின்னர் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை அதிகரித்ததன் மூலமும் தேர்தல் திருத்தச் சட்டங்கள் கொண்டும் பாராளுமன்றத்தில் சிங்கள பிரதிநிதித்துவத்தின் எண்ணிக்கையை மேலும் அதிகரித்துக் கொண்டது. அதுவும் போதாதென காலத்திற்கு காலம் தமிழ், முஸ்லீம் பிரதிநிதிகளை விலைக்கும் வாங்கிக் கொண்டது. இந்த புதிய யாப்பிலும் கூட 225 பிரதிநிதிகளின் எண்ணிக்கையானது 281 ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

இந்த நிலை இன்றுவரை தொடர்கின்றது. இதற்கு நம்மவர்களே உடந்தையாக இருப்பது அவமானகரமான உண்மையாகும். தமிழ் கட்சிகளுக்குள் கால்வாருதல், தமிழ்கட்சிகளுக்கிடையில் மோதல்கள், வேட்பாளருக்கான வாய்ப்புக் கிடைக்காத தமிழர்சிலர் சிங்கள கட்சிகளால் விலைக்கு வாங்கப்பட்டு சுயேட்சையாக களத்தில் இறக்கிவிடப்பட்டு தமிழ் வாக்குகளை துண்டாட பயன்படுத்தப்படுகின்றனர்.

அதே சமயம், மக்கள்மீதும், அவர்களது அரசியல் உரிமைகள் மீதும் அக்கறை கொண்டு தமிழ் தேசியத்தின் ஒருமித்த உணர்வை வெளிப்படுத்தும் நோக்குடன் தேர்தலில் நிற்க முயன்ற ஒருசிலரை சிங்கள அரசு பயங்கரவாதச்சட்டங் கொண்டு கைது செய்து சிறைகளில் அடைத்துவிட்டு, அரசியல் நீரோட்டத்தில் கலக்கும்படி வெளியில் அழைப்பும் விட்டுக்கொண்டிருக்கிறது. மாறாக, சில தமிழ் கட்சிகளை மட்டும் சிங்கள அரசு தேர்தலில் நிற்க அனுமதிப்பதன் மர்மம் இப்போது நமக்கு துலங்குகின்றது.

இவர்களை கொண்டு தமிழரின் வாக்குகளை பெற்று பின்னர் இந்த பிரதிநிதிகளை இலகுவில் விலைக்கு வாங்கி, தம் ஆதிக்க வெறிகளுக்கு பயன்படுத்திக் கொள்வதற்குத்தான் என்பது நமக்கு தெளிவாகின்றது. வரலாற்றைப்புரட்டினால் அடுத்தடுத்து பல உதாரணங்களை நாம் காண முடியும். எவ்வாறாயினும் யார் யாரை எக்காரணங்களுக்காக ஏற்றுக்கொள்வது, எப்போது தூக்கியெறிவது என்பது நமது மக்களுக்குத் தெரியும். யார் யார் எப்படியெல்லாம் பிரதிநிதியானார்கள் என்பதும் மக்களுக்கு தெரியும். வருகின்ற தேர்தலில் மக்கள் அதனை முற்றாக புறக்கணிப்பதன் மூலமாகவோ, அல்லது வேறு விதத்திலோ தேசமாக ஒருமித்து நின்று சிங்கள அரசுக்கும் அதன் அடிவருடிகளுக்கும் நிச்சயம் பாடம்புகட்டுவார்கள்.

விஜி

## மானுடத்துவத்திற் கெதிரான குற்றவாளி சந்திரிகா!

தமிழீழத்தின் இருப்பை நசுக்கியபடி தமிழீழத்திற்கு எதிராக ஆக்கிரமிப்பு யுத்தம் மேற்கொண்டு வரும் சந்திரிகா அரசின் குற்றங்கள்:

- பொதுமக்கள் குடியிருப்புகள் மீது பரவலான விமான மற்றும் பல்குழல் பீரங்கி குண்டுவீச்சின் மூலம் நூற்றுக் கணக்கில் பொதுமக்களை கொன்று குவித்தல்.
- படுகாயப்படுத்துதலும் அங்கவீனராக்குதலும்
- தமிழர் தாயகம் எங்கும் கண்ணி வெடிகளை புதைத்து வைத்திருத்தல்
- படைத்தள விஸ்தரிப்பிற்காகவும் அத்துமீறிய சிங்கள குடியேற்றங்களுக்காகவும் தமிழர் வாழ்விடங்களை அபகரித்தல்
- கண்மூடித்தனமான கைதுகள், கடத்தல்கள், சித்திரவதைகள், படுகொலைகள்
- மக்களை படுகொலை செய்து மனிதப் புதைகுழிகளை உருவாக்குதல்
- குழந்தைகளுக்கான பால் பொருள் அடங்கலாக கட்டற்ற பொருளாதார தடை மூலம் தேசத்தை பட்டினிபோட்டு கொல்லுதல்
- மருந்து/ மருத்துவ சாதன தடை விதித்து மக்களை சாவுக்கு இரையாக்குதல்
- பாலியல் சித்திரவதைகள், வன்புணர்ச்சி குற்றங்கள் மற்றும் அவமானப்படுத்தும் நடவடிக்கைளில் ஈடுபடுத்துதல்
- உடல்-உள ரீதியாக பாதிக்கும் தடுப்பு முகாம்களில் ஆயிரக்கணக்கானோரை அடைத்து வைத்து விசாரணை எனும் பெயரில் துன்புறுத்துதல்
- வணக்க ஸ்தலங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், வயோதிபர் மடங்கள் என பொதுஸ்தலங்களுக்குக் குண்டு வீசி மக்களை கொன்று குவித்தல்
- அகதிமுகாம்கள் மீது திட்டமிட்டு விமான குண்டு வீச்சு நடாத்துதல்
- மக்கள் குடியிருப்புகளையும், பயிர் செய் நிலங்களையும், இயற்கை வளங்களையும் நாசகாரப்படுத்துதல்
- கல்வி பெறுவதற்கான சூழலை திட்டமிட்டு இல்லாது செய்தலும், ஆளுமையுள்ள மாணவர்களையும் இளம் தலைமுறையினரையும் இலக்கு வைத்து அழித்தொழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுதல்
- செய்தித் தணிக்கை மூலம் தேசத்தின் தகவல் பறிமாற்றத்தை சிதைத்தல், தமிழ் ஊடகவியலாளர்களை தாக்குதல், படுகொலை செய்தல்
- நமக்காக குரல் கொடுக்கும் நம்தேச பொது மனிதர்களை படுகொலை செய்தல்

நிறுத்துவோம் சிறிலங்காவின் மானுடத்துவத்திற்கெதிரான குற்றவாளி சந்திரிகாவை மக்கள் நீதிமன்றத்தில் !!!

சர்வாதிகாரிகளையும் மக்கள் விரோதிகளையும் வரலாறு மன்னித்ததில்லை என்பதை உலகு மீண்டுமொருமுறை குறித்துக் கொள்ளட்டும்!!!! -சியா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யுத்தகால பாலியல் வன்முறைகள்:

# குற்றவாளிகள் ஆணாதிக்க அரசுகளே!

அன்றைய அரசர்களிலிருந்து இன்றைய வல்லரசுகளின் கூட்டுக்கள் வரை நடாத்திவருகின்ற யுத்தங்களின்போது ஆயிரக்கணக்கான பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர்.

ஆணாதிக்க அரசுகள் நடாத்திவரும் யுத்தங்களின் போது ஆண் பெண் இருபாலினரும் பல துன்பங்களையும் நெருக்கடிகளையும் தாங்கிக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்றனரென்றபோதும் நாம் பெண்களாகவிருப்பதனால் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டு மேலும் துன்பத்தினை அனுபவிக்க வேண்டியவர்களாகிறோம்.

குடும்பங்களிலும், குடும்பங்களுக்கு வெளியில் அமைந்த எமது வாழ்வின் அனைத்துத் தளங்களிலுமே நாளாந்தம் பாலியல் வன்முறைகள் எம்மீது நிகழ்த்தப்படுகின்றன. ஆனாலும் அது சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்ட ஒன்றல்ல. நாம் வாழும் ஆணாதிக்க சமூகங்கள் ஆணாதிக்கத்தினை நடைமுறைப்படுத்த அனுமதித்திருக்கிறன என்ற வகையில் ஆணாதிக்கத்தை செயற்படுத்தும் வடிவங்களின் ஒன்றான பாலியல் வன்முறையையும் மறைமுகமாக அனுமதித்திருக்கின்றன என்று கொள்ளலாம். பொதுவாக எம்மீது மேற்கொள்ளப்படுகின்ற பாலியல் வன்முறைகளுக்கு எதிராகச் சட்டநடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளமுடியும் என்று எழுத்தில் சட்டங்களாக பதிக்கப்பட்டுள்ளன. (நடைமுறையில் இது எவ்வளவுக்கு சாத்தியமாகிறது என்பது இன்னொருபக்கக் கேள்வி) நாட்டுக்கு நாடு இந்தச் சட்டங்கள் வேறுபடுகிறன.

ஆணாதிக்க அரசுகளின் கருவிகளாக இயங்கும் இராணுவத்தினர், கூலிப்படைகள், பொலிஸார், ஊர்காவற்படையினர் யுத்தங்களின் போது பாலியல் வன்முறைகளில் சுதந்திரமாக ஈடுபடுவதனைக் காண்கிறோம். ஆகவே இந்த யுத்தகாலங்களில் நடாத்தப்படும் பாலியல் வன்முறையென்பது, ஆணாதிக்க அரசுகள் எம்மீது திட்டமிட்டு நடாத்தும் சட்டபூர்வமான வன்முறை வடிவங்களிலொன்றென்றே புரிந்துகொள்கிறோம்.

இன்று பேரினவாத ஆணாதிக்க சிங்கள அரசின் கருவியாக இயங்கிக்கொண்டிருக்கும் சிங்கள இராணுவம் பொலிஸ் போன்றோரின் ஆண்வெறித்தனத்திற்கு ஆளாகிப்போன தமிழீழச் சகோதரிகளுக்கு நடந்த, நடந்து கொண்டிருக்கும் கொடுமைகள் பற்றி நாம் அறிவோம். இதுபோலவே ஒடுக்கப்படும் குர்திஸ் சிறுபான்மை மக்களில் பாதியினரான குர்திஸ் சகோதரிகளும் பேரினவாத ஆணாதிக்க துருக்கிய அரசினது கூலிப்படைகளின் பாலியல் வெறித்தனங்களை மிகத் துன்பமுடன் அனுபவித்துவருகின்றனர். ஏனைய பேரினவாத அரசுகளுக்கெதிரான விடுதலைப்போராட்டங்கள்போல் தமது உரிமைகளுக்காகப் போராடிவரும் குர்திஸ் மக்களின் விடுதலைப் போராட்டத்தினை நசுக்கிட முனையும் அல்லது இழிவுபடுத்தும் நடவடிக்கைகளில் ஒன்றாக பெண்கள் மீதான பாலியல் வன்முறையை தனது அரச கருவியாகிய பொலிஸ், இராணுவம், ஊர்காவற்படைகளை கொண்டு நிகழ்த்தி வருகிறது துருக்கி அரசு. சோதனையென்ற பெயரிலும், கிராமங்கள் சுற்றிவளைக்கப்படும்போதும், விடுதலை அமைப்பில் பங்குபெறுவதான குற்றச்சாட்டுக்களிலும், சந்தேகத்தின்பேரிலும், "தீவிரவாதிகளுக்கு" உதவிபுரிந்ததாகவும், போராளிகளின் சகோதரிகளாக, மனைவியாக, தாயாக, மகளாக இருப்பதனாலும் வீதிகளில், கிராம மக்கள், உறவினர்கள் முன்னிலையில், பொலிஸ் வாகனங்களில், சிறைக்கூடங்களில் என்று பாலியல் சித்திரவதைக்காளாகின்றனர்.



போராளிகள் என்ற சந்தேகத்தில் குர்திஸ் பெண்களாக இருக்கும் ஒரே காரணத்திற்காக கைதாகும் பெண்கள் மீதும் இவ்வன்முறை மிகவும் சாதாரணமாக கட்டவிழ்த்துவிடப்படுகிறது. உதாரணமாக: கைதான சில பெண்கள், போராளிப் பெண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு சிறைச் சாலைகளுக்குள் பலர் முன்நிலையில் இழுத்துச் செல்லப்பட்டு பின் ஆண் கைதிகளுடன் ஒன்றாக அடைக்கப்படுகின்றனர். எமது ஈழத்தமிழ்ச் சமூகத்தினைப் போலவே குர்திஸ் சமூகமும் ஆணாதிக்கக் கருத்துக்களால் கட்டமைக்கப்பட்டுள்ளதால் தாம் குற்றவாளிகளாக்கப்பட்டு, தமது சமூகத்தால் ஒதுக்கப்பட்டு விடுவார்கள் என்ற பயம் காரணமாக இந்தப் பெண்கள் தமக்கு நிகழ்ந்த பாலியற் சித்திரவதைகள், கொடுமைகள் பற்றி வெளியில் சொல்வதில்லை. துணிந்து வெளிக் கொண்டரும்போது அல்லது சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது அவர்களது நடவடிக்கைகளை நிறுத்துமாறு மேற்குறிப்பிட்ட ஆணாதிக்கவாதிகளால் மிரட்டப்படுகின்றனர் அல்லது தமது கிராமங்களைவிட்டே (இருப்பிடங்களைவிட்டு) வெளியேற நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். கைதாகும் பெண்கள் குறிப்பாக போராளிப்பெண்கள் சில வேளைகளில் கர்ப்பப்பை(கற்புப்) பரிசோதனைக்கு, பொலிஸார் இராணுவத்தினர் முன்னிலையிலேயே நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இந்தப் பரிசோதனைக்குப் பின்னர் கைதான குர்திஸ் பெண்கள், போராளிப்பெண்கள் "ஏற்கனவே கெட்டுப் போனவர்கள்" என்றும் தாம் இவர்களைப் பாலியல்வன்புணர்வு செய்யவில்லை என்றும் ஆண்போராளிகளுடன் பாலுறவை வைத்துக்கொள்வதே இவர்களது நோக்கம், போராட்டம் அல்ல என்று போராளிப் பெண்களையும், அதனூடாக ஒட்டுமொத்த குர்திஸ் சமூகத்தினையும், போராட்டத்தினையும் கொச்சைப்படுத்துவதே இவர்களது நோக்கமாகும்.

விடுதலைப் போரட்டத்தினை நடாத்திவரும் சமூகங்களின் பெறுமதி மிக்கதான வளங்கள், அவர்களது தேசிய அடையாளங்களாகவுள்ள அனைத்தையும் அழித்து விடுவதன் மூலம் அம்மக்களின் விடுதலைப் போராட்டங்களை நிறுத்திவிடலாம் என்ற எதிரியின் திட்டமிடப்பட்ட யுத்தகால தந்திரோபாயங்களில் ஒரு பகுதியாக இவையுள்ளன.

ஐ.நா. சபையின் மனித உரிமை கமிஷன் மூலம் யுத்தக் குற்றவாளிகள், அவை எப்படிப்பட்ட குற்றங்கள் என்று வரையறுக்கப்பட்டு விசாரிப்பதற்கான நீதிமன்றங்கள், கமிஷன்கள் உருவாக்கப்பட்டு உள்ளன.

இரண்டாவது உலகயுத்தத்தின்பின் ரோக்கியோவிலும், ஜேர்மன் நகராகிய நர்ன்பெர்க்கிலும் கொண்டுவரப்பட்ட யுத்தக் குற்றவாளிகளை விசாரணை செய்வதற்கான கமிஷனின் யுத்தக்குற்றப் பட்டியலில் சில யுத்தக்குற்றங்கள் மட்டுமே உள்ளடக்கப்பட்டன. நூறாயிரம் பெண்கள் வன்புணர்ச்சிக்குள்ளாக்கப்பட்டதன் மூலம் இழைக்கப்பட்ட யுத்தக்குற்றச்செயல்கள் மேற்குறிப்பிட்ட குற்றச் செயல்களில் ஒன்றாக எடுத்துக்கொள்ளப்படவேயில்லை.

றுவண்டாவிலும் பொசினியாவிலும் யுத்தகாலத்தின்போது ஆயிரக்கணக்கான பெண்கள் பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர்தான் ஐக்கிய நாடுகள் சபையினால் உருவாக்கப்பட்ட யுத்தக்குற்றவாளிகளை விசாரிப்பதற்காக கமிஷனின் குற்றப்பட்டியலில் பெண்களுக்கெதிரான பலவடிவிலான பாலியற் சித்திரவதையும் பாலியல் வன்புணர்வும் ஜெனிவா உடன்படிக்கையின் கடுமையான அத்துமீறலாகவும் அதாவது கடுமையான யுத்தக் குற்றச்செயலாகவும் மனிதாபிமானத்திற்கெதிரான கடும் குற்றமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பெண்கள்மீதான எந்தவொருவடிவிலான பாலியல்வன்முறை அதாவது பாலியல் வன்புணர்ச்சி, கட்டாய பாலியற் தொழிலில் ஈடுபடவைத்தல், மற்றவர்களின் முன்னிலையில் கட்டாயமாக நிர்வாணப்படுத்தல், மேலும் இதுபோன்ற செயல்கள் ஒரு பெண்ணின்மீது ஒரு தடவையேனும் நிகழ்த்தப்பட்டால் அது ஜெனிவா உடன்படிக்கைக்கெதிரான கடுமையான மீறலாக அதாவது கடுமையான யுத்தக் குற்றச் செயலாகக் கருதப்படும். இப்படிப்பட்ட குற்றம் ஒருவரின் கட்டளையின்கீழ் நடாத்தப்பட்டதாக இருக்கவேண்டுமென்றில்லை, ஒருவர் சுயமாக இக்குற்றங்களைப்புரிந்திருந்தால் அது யுத்தக் குற்றமாகவே கருதப்படும்.

1998 யூலையில் 120 நாடுகள் இணைந்து நிரந்தரமான சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஒன்றினை றோம் நகரில் உருவாக்கின. இந்த நாடுகளின் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட குற்றச் செயற் பட்டியலில் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறை அதாவது பாலியல் வன்புணர்ச்சி, பாலியல் அடிமைத்தனம், கட்டாய பாலியற் தொழிலில் ஈடுபடுத்தல் ஆகியன குற்றச்செயல்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன. இதில் சிக்கலான அதேவேளை நாம் சிந்திக்கவேண்டிய விடயம் என்னவென்றால் குற்றவாளிகள் இந்நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட வேண்டுமானால் அவரவர் நாட்டு அரசின் அனுமதி பெறப்பட்டே இந்நீதிமன்றங்களில் விசாரிக்கப்படலாம் என்பதுதான். குற்றச் செயல்களைப்புரியும் அரசுகளே விசாரணைக்கான அனுமதியினை வளங்குவதா? (எத்தனையோ ஆயிரம் யுத்தக் குற்றவாளிகளைக்கொண்ட துருக்கி இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.)

இலங்கை, துருக்கி போன்ற பேரினவாத அரசுகளோ, அமெரிக்கா போன்ற ஏனைய வல்லரசுகளோ குர்திஸ், தமிழீழ இயக்கங்களோ எதுவாகவிருந்தபோதும் யுத்தகாலங்களில் இழைக்கும் குற்றங்களுக்குத் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்

- ☞ இரண்டாவது உலகயுத்தத்தின்போது 2,00,000 பெண்கள் பாலியல் வன்முறைக்கு (வன்புணர்ச்சி, கட்டாய பாலியற் தொழில்) பலியாக்கப்பட்டனர்.
- ☞ ஹிட்லரின் பாசிச ஆட்சிக்காலத்தில் ஆயிரக்கணக்கான பெண்களும்,
- ☞ 1937ல் சீனாமீது யப்பானின் ஆக்கிரமிப்பின்போது யப்பானிய துருப்புக்களால் ஒரு மாதகாலத்தில் 20,000 பெண்களும்,
- ☞ 1971ல் பாக்கிஸ்தானிலிருந்து பங்களாதேஸ் சுதந்திரமடைவதற்கான போராட்டத்தின் போது பாக்கிஸ்தான் மற்றும் இந்திய படைகளால் 2,00,000 பங்களாதேஸத்துப் பெண்களும்,
- ☞ குவைத்தின்மீதான ஈராக்கிய ஆக்கரிமிப்பில் ஈராக்கிய கூலிப்படைகளால் 5000 குவைத் பெண்களும்,
- ☞ 1994ல் றுவண்டாவில் நடைபெற்ற யுத்தத்தில் 2,50,000 இலிருந்து 5,00,000 பெண்களும்,
- ☞ பொஸ்னியாவில் 20,000 வரையிலான பெண்களும் பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளானவர்களாவார்கள்.
- ☞ இவற்றைவிட இங்கு வெளித் தெரியப்படுத்தப்படாத யுத்தகால பாலியல் வன்முறைள் எத்தனை?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முஸ்லிம் தேசத்திற்கு விடுதலைப் புலிகளின் அழைப்பு. . . ???



முஸ்லிம் தேசத்தை நோக்கிய ஒரு பகிரங்கக் கடிதத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் பிரசுரமாக அண்மையில் வெளியிட்டுள்ளனர். இதில், சிறிலங்கா அரசின் தந்திரங்களுக்குப் பலியாக வேண்டாம், தமிழ் மக்களுக்கும் முஸ்லீம் மக்களுக்கும் உறவு சீர்குலைந்ததற்கு சில தீய சக்திகளே காரணம் எனவும் கூறி, தமிழீழப்பிரதேசத்தில்வாழும் முஸ்லிம் மக்களுக்கும் தமிழீழம் தாயகமாகும், அவ்வகையில் தமிழ் மக்களின் தாயக மீட்புக்கு - தமிழீழ விடுதலைக்கு முஸ்லிம் மக்கள் ஆதரவு வழங்க வேண்டும், எனவும் அழைப்பு விடுத்துள்ளனர். விடுதலைப் புலிகளின் இந்த பகிரங்க அழைப்பு முஸ்லிம்தேசத்தின்மத்தியில் பரபரப்பையும், பல்வேறு கேள்விகளையும், ஆச்சரியக் குறிகளையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழீழம் இங்கு வாழும் முஸ்லிம்களினதும் தாயகம் என விடுதலைப் புலிகள் அமைப்பினர் பகிரங்கமாக அறிவித்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இதனை தமிழீழ விடுதலைப்போராட்டத்தில்சக தேசங்களைச்சமமாக மதிப்பதற்கான, சரியான திசையில்ஒரு நகர்வு எனலாம். ஆனால் அது இத்துடன் முற்றுப் பெற்று விட்டதா?

தமிழீழ விடுதலைப் புலிகள் ஈழத்தமிழ் தேசத்தின் பிரதிநிதிகளில் பிரதான தரப்பினர் - ஈழத்தமிழர்களின் அரசியல் தலைமையாகவும் இயங்கி வருகிறார்கள். ஒரு தேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்பினர், சக தேசமொன்றினை நோக்கி தமது போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும்படிக்கோருவது, அத்தேசத்தின்பாலான உயர்ந்தபட்ச நம்பிக்கை மற்றும் பிணைப்பின் அடிப்படையினாலாகும். எனினும் இத்தகையதொரு கோரிக்கையை முஸ்லிம் தேசத்தைப்பார்த்து முன்வைப்பதற்கு முன்னர் இன்றைய சூழலில் ஈழத்தமிழ் தேசத்தினரான நாமும், நமது தேசத்தின் அரசியல் தலைமையான விடுதலைப் புலிகளும் நிறைவேற்ற வேண்டிய அடிப்படை தார்மீக கடமைகள் தான் என்ன?

முஸ்லிம் தேசத்துடன் இதயசுத்தியான உறவொன்றை தாபிக்க நாம் விரும்புவோமாயின் முதலில் ஒரு தேசமாக, முஸ்லிம் தேசத்துக்கு எமது தரப்பில் இழைக்கப்பட்டுள்ள வரலாற்று வழிப்பட்ட இதுவரைகால அநீதிகளுக்காக முதலில் மனந்திறந்த சுயவிமர்சனம் செய்துகொள்வோம். தவறுகளை பொறுப்பேற்போம். இதனூடாக இத்தகைய தவறுகள் எதிர்காலத்தில் ஈழத்தமிழ் தரப்பால் இனி ஒருபோதும் முஸ்லிம் தேசத்திற்கெதிராக மேற்கொள்ளப்பட மாட்டாது என பகிரங்கமாக அறிவிப்போம். இதுவே முஸ்லிம் மக்கள் நம்மீது நம்பிக்கை கொள்வதற்கான ஆரம்ப அடித்தளமாகும்.

முஸ்லிம் தேசத்தின் விடயத்தில் நம்மால் முன்னெடுக்கப்பட வேண்டிய கொள்கை மற்றும் நடைமுறைசார் கடமைகள் நிறையவே உள்ளன. தமிழீழத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களை விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மீளக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான கடப்பாட்டை விடுதலைப் புலிகள் கொண்டுள்ளனர். இதற்காக வடக்கு முஸ்லிம்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கான சூழலை விடுதலைப் புலிகள் தற்போதிருந்தே ஆரம்பிக்க வேண்டும். அதேபோல் தென்தமிழீழத்தில்கடந்தகால கசப்பான அனுபவங்களின் காரணமாக அச்சத்துடனும் பதட்டத்துடனும்வாழ்ந்துவரும்முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு தொடர்பாக பகிரங்க உத்தரவாதமளித்திட வேண்டும். இதற்காக அவர்களின் அரசியல் பிரதிநிதிகள் மற்றும் மதத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை சமத்துவ அடிப்படையில் மேற்கொள்ளவும் பரஸ்பர சந்தேகங்களை நீக்குவதற்கான முயற்சிகளில் இறங்கவும் வேண்டும்.

குறிப்பாக, முஸ்லிம் தேசத்திற்கான எமது கடப்பாடுகளை நடைமுறையில் செயற்படுத்துவதே இனி நமது கடமையாயிருக்க வேண்டும். இதை உறுதிப்படுத்தும் பொறுப்பு தமிழீழ விடுதலைப்புலிகளுக்குரியதாகும்.

முஸ்லீம்கள் எமது தேசிய விடுதலைப்போராட்டத்திற்கு பங்களிப்பதோ அல்லது பங்கேற்பதோ அல்லது நடுநிலை வகிப்பதோ என்பது அவர்களது கூட்டானதும் தனியானதுமான தெரிவாகும். இந்த அடிப்படை உண்மையை நமது தேசமும் விடுதலைப் புலிகளும் புரிந்துகொள்வதுடன்இதை முஸ்லிம்களுக்கு பகிரங்கமாக அறிவித்திடவும் வேண்டும். தனித்துவமான ஒரு தேசம் எனும் அடிப்படையில் முஸ்லிம் தேசம் தான் விரும்பியவாறான அரசியல் வாழ்வை ஏற்படுத்திக்கொள்ளும் உரித்துடையது எனும் அடிப்படை புரிதலிலிருந்தே முஸ்லிம் தேசத்துடனான நமது உறவு ஆரமப்பிக்கப்பட வேண்டும்.

இன்று வரையிலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தன்மைகளை முஸ்லீம் மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். நமது தேசத்திற்கும் தமது தேசத்திற்கும் இடையிலான பொதுத் தாயகம் சார்ந்த இணைவையும் உணர்கின்றனர். எனினும், மிகவும் கறைபடிந்த தமிழர் போராட்டத் தலைமையின் நடவடிக்கைகள் முஸ்லிம் தேசத்தினை தொடர்ச்சியான அச்ச வாழ்வுக்குத் தள்ளிவிட்டுள்ளது. இந்த அச்சத்தையும் மற்றும் எமது கறைபடிந்த வரலாற்றையும் களையும் பொறுப்பு தமிழ்த் தரப்பினதே! அது எமது தேசத்தினது கடப்பாடு மட்டுமே!!

-சுபத்திரா-

## யுத்தகால...

(4ஆம் பக்க தொடர்ச்சி...)

என்பதில் எமக்கு மாற்றுக் கருத்து இருக்கமுடியாது. யார் யாரை விசாரிப்பது என்ற கேள்வியிற்தான் முரண்பாடு எழுகிறது.

இன்று யுத்தகாலங்களில்பெண்களைப் பாலியல்வன்முறைக்குள்ளாக்கும் அனைத்து அரசுகளுமே யுத்தக் குற்றவாளிகள் தான். இவைகளை விசாரணைசெய்வது யார்?இந்த விசாரணை மன்றங்களினால்ஒரு சில தனிப்பட்ட குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைக்கலாம், ஒரு சில பெண்களும் நியாயம் கிடைத்துவிட்டதாக அமைதிகொள்ளலாம். ஆனால் தொடரும் எம்மீதான பாலியல் வன்முறைகள் நிறுத்தப்படுமா? அல்லது குறைந்துதான் விடுமா? இதுவரைகாலமும் எத்தனை ஆயிரம் பெண்கள் ஆணாதிக்க அரசுகள் நடாத்திவரும் யுத்தங்களின் பாலியல் வன்முறைக்கு பலியாக்கப்பட்டுவிட்டனர்? அதற்குப் பின்னர் எத்தனை கமிஷன்கள் உருவாக்கப்பட்டுவிட்டன? இந்த ஆணாதிக்க அரசுகளின் குற்றங்களை இன்னும் எவ்வளவுகாலம்தான் அனுமதிக்கப்போகிறோம்? பாலியல் வன்முறைகளை தொடர்ந்தும் எத்தனை பெண்கள் அனுபவிக்கப் போகிறோம்? ஆணாதிக்கம் முற்றிலும் களையப்பட்ட பாலியல் வன்முறையற்ற சமத்துவமான அரசுகளை எப்போதுதான் உருவாக்கப்போகிறோம்?

வன்முறைகளினால் புண்படுத்தப்பட்ட உணர்வுகளில் எழுந்த வெறும் கேள்விகளல்ல இவை. பெண்கள் எமது இதயங்களின் அடியாளத்திலிருந்து கொப்பளித்துப் பீறிடும் நியாயத்திற்கான குரல்கள். கேள்விகளோடு மட்டும் நின்றுவிடாமல் விடைசொல்லும் காலமும் வந்துவிட்டது. நீதிகோரும் எமது குரல்கள் ஆணாதிக்க நீதிமன்றங்களில்தான் இதுவரை ஒலித்து வந்துள்ளன. அந்த நீதிமன்றங்களில்எமக்கு நியாயமான தீர்வுகளும் கிடைத்துவிடவில்லை. இனி இந்த நிலையை மாற்றுவோம். நீதியின் தேவதைகளாக எம்மீது வன்கொடுமை புரிவோருக்கெதிரான தண்டனைகளை நாமே வழங்குவோம். அதற்கான சட்டங்கள், நீதிமன்றங்கள், அரசு ஆகியவற்றை நிறுவுவோம். ஆம்! பெண்களின் வீரத்தினால் மலர்ந்திடும் தமிழீழ மக்கள் குடியரசில் பெண்கள் எமது விடயங்களை தீர்மானிக்கும் உரிமையை எமது கைகளிலெடுப்போம்.

-இத்தினி

## திட்டமிட்ட...

(முதலாம் ஆம் பக்க தொடர்ச்சி...)

சக்திகள் சாதித்து விடுகின்றனர். வழக்கில் பெறும்அற்ப வெற்றிக்குள் திளைக்கவிட்டு, தாராள ஜனநாயகப் பிரிவினரை சாந்தப்படுத்தி, அவர்களின் கவனத்தை சிறு சிறு வெற்றிகளின்பால் திருப்தியுறச் செய்துவிட்டு, பாரிய தம் இலக்கையும், சூழ்ச்சியையும் ஆளுங்கும்பல் நிறைவேற்றிக்கொள்கின்றது.

பல பத்து ஜனாதிபதிசட்டத்தரணிகள் 24 மணி நேரமும் சட்டப்புத்தகங்களுடன் சந்திரிகாவை சுற்றி எப்போதும் தயார் நிலையில் இருக்கையில், இந்த சட்ட மீறல், அதுவும் அரசியல்யாப்பு மீறல்கள் எப்படி சாத்தியமாயிற்று? உண்மையில், வேண்டுமென்றே அவர்கள் சட்டமீறல் செய்கின்றனர். தெரிந்து கொண்டே சட்டத்துடன் விளையாடுகின்றனர். ஆதிக்க சக்திகளை இந்த சட்டம் காக்கின்றது, இந்த சட்டத்தை வன்முறை இயந்திரமான முப்படைகளும் பொலீஸ்படைகளும் காலங்காலமாக காத்து நிற்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தனித்துவங்களின் சமத்துவம்

தனித்துவம் என்பது மனிதர்களுக்கேயுரிய குறிப்பான அம்சங்களில் ஒன்று. ஏனைய உயிரினங்களில் ஒரே வகையைச் சேர்ந்தவை, பொதுவான நடத்தை பாங்குகளை வெளிப்படுத்துகின்றபோது, மனிதர்களோ பன்முகத் தன்மை கொண்டவர்களாக, தனித்துவ வார்ப்புகளாக அமைகின்றார்கள். தனியே உடல்தோற்ற அமைப்பில்மட்டுமின்றி, நடத்தை கோளங்கள், உளவியல் பிரதிபலிப்புகள்..என அகம், புறம் சார்ந்ததாக, ஒவ்வொரு தனிநபரும் தனித்துவமானவராக இருக்கின்றார். பரம்பரை அலகுகளின் தாக்கம், நிறம், இனம், மதம்,பாலினம், கலாச்சாரம், நம்பிக்கைகள், வாழ்விடம், வயது. வளர்ப்புமுறை, சமூக, மற்றும் பொருளாதார அமைவு. என மிகப் பல காரணிகளின் சிக்கலான இணைவின் விளைவாக ஒருவரது தனித்துவம் கட்டமைக்கப்படுகின்றது. ஆழ்ந்து நோக்கும்போது, ஒருவரது தனித்துவமானது, அவரது சுயதேர்வுக்கு உட்படாமலேயே கட்டமைக்கப்படுகின்றது என்பதை புரிந்து கொள்ள முடியும். இவ்வகையில் ஒருவரின் தனித்துவம் என்பது, அவரது சமூக, உயிரியல் சாரமாகவும் எனவே அவரது பிறப்புரிமையாகவும் அமைகின்றது.

இவ்வாறு தனித்துவம் என்பது, ஒருவரது உள்ளார்ந்த அம்சமாகவும் அவரது உரிமையாகவும் அமைகின்றபோது, ஒருவர் தன்னை தானாகவே வெளிப்படுத்துவதற்கும் அவ்வாறு வெளிப்படுத்துவதற்கான சூழலை கொண்டிருப்பதற்குமான சுதந்திரத்தை பெறுகின்றார். இந்த சுதந்திரம் மறுக்கப்படுகின்றபோது, அதுவே ஒருவர் மீதான அடக்குமுறையாக மாறுகின்றது. நாளாந்த வாழ்வில் ஒருவரது சுயவெளிப்பாட்டுச் சுதந்திரம் இவ்விதம் மறுக்கப்படுவது என்பது, மிகப் பல வடிவங்களிலும் மிக இயல்பாகவும் நிகழ்கின்றது.

பின்வரும் உண்மையை கவனிப்போம்: நாம் ஒவ்வொருவரும் நமது மதம், கலாச்சாரம், இனம், மொழி, பண்பாட்டு அம்சங்கள், நம்பிக்கைகள்..போன்றவற்றை சரியானவையாகவும் உயர்ந்தவையாகவும் கருதுகின்றோம். இது வெறுமனே எமது உணர்வுசார்ந்த விடயமாக மட்டும் அமைவதில்லை. கூடவே, நடைமுறைரீதியில் இது, எம்மிடமிருந்து வேறுபடுகின்றவர்களை தாழ்ந்தவர்களாகவும் வெறுப்புக்குரியவர்களாகவும் கணித்து செயற்படுகின்ற நிலைக்கு எம்மை இட்டு செல்கின்றது. இவ்வாறு நம்மிடமிருந்து வேறுபடுகின்றவர்களை, தாழ்ந்தவராக, வெறுப்புக்குரியவராக மதிப்படுகின்றபோது, அதுவே அவர்கள் மீது அதிகாரம் செலுத்துவதற்கான கருத்தியல் அடித்தளமாக அமைந்து விடுகின்றது. இவ்விதம் மற்றவர்களின் தனித்துவ அம்சங்களை தாழ்வாக கருதி, அவர்கள் மீது அதிகாரம் செலுத்தப்படுகின்ற ஒரு மரபில், தாழ்ந்தவர்களாகவும் வெறுப்புக்குரியவர்களாகவும் கருதப்படுகின்றவர்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற எத்தகைய அடக்குமுறைகளையும் வன்முறைகளையும் நியாயப்படுத்துகின்ற மனநிலை இயல்பாக உருவாகி விடுகின்றது.

தனிநபர்களின் தனித்துவம் சார்ந்து வெளிப்படுகின்ற இத்தகைய அதிகார முறைமையை, சமூகங்களுக்கிடையிலான உறவுகள்வரை விரித்து செல்வோம். உலகில் பல நூற்றுக்கணக்கான சமூகங்கள் நிலவுகின்றன என்ற எதார்த்தமானது, அவை ஒவ்வொன்றும் தனித்துவமானவை என்ற உண்மையை சுட்டிக் காட்டுகின்றன. இச்சமூகங்கள் ஒவ்வொன்றும் தமக்கேயுரிய வழியில் நூற்றுக்கணக்கான வருட வரலாற்றையும் இயக்கத்தையும் கொண்டிருக்கின்றன. இத்தனை காலத்தின் பின்னரும் இச்சமூகங்கள் ஒவ்வொன்றும் நிலைத்து இயங்குகின்றன என்ற எதார்த்தமானது, இவை கொண்டிருக்கின்ற தனித்துவமான பண்புகளின் வலிமையையும் உயிராற்றலையும் உணர்த்தி நிற்கின்றது. கூடவே, இத்தனை வரலாற்று கட்டங்களினூடும் நிலைத்து இயங்கியதைப் போன்று, இனிவரும் காலத்திலும் நீடித்து இயங்குவதற்கு, இச்சமூகங்கள் கொண்டிருக்கின்ற பிரிக்க முடியாத உரிமையையும் இது வெளிப்படுத்துகின்றது.

எனினும் ஒவ்வொரு சமூகத்திற்குமுள்ள பிரிக்க முடியாத இந்த உரிமையானது, வரலாறு நெடுகிலும் உதாசீனப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. ஒரு சமூகம் கொண்டிருக்கின்ற சுயவாழ்விற்கான உரிமையானது, ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு தர்க்க நியாயங்களின் கீழ் மறுக்கப்பட்டு வந்திருக்கின்றது. இத்தகைய மறுப்பானது அதன் தீவிர நிலையில், குரூரமான மனித அழிப்புகளாக வெளிப்பட்டிருக்கின்றது. நூற்றாண்டுகளாக இடம்பெற்ற சிலுவை யுத்தம், அமெரிக்க பூர்வீக மக்கள் லட்சக்கணக்கில் கொன்றொழிக்கப்பட்டமை, கொலனித்துவ படுகொலைகள்..என விரிந்து, இந்த நூற்றாண்டில், நாஸிகளின் கொலைவெறி, இந்தோனேசிய மற்றும் சேர்பிய படைகளினால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள், சிறிலங்கா அரசின் இனஅழிப்புகள் என வியாபித்து செல்கின்றன. இத்தகைய படுகொலைகளுக்கான சமூக, பொருளாதார, அரசியல் காரணங்கள் பலவாக இருக்கலாம். ஆனால், இத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆதிக்க சமூகங்கள் மத்தியில் தாம் உயர்ந்தவர்கள், ஆதிக்கம் செலுத்த பிறந்தவர்கள் என்ற



கருத்து நிலைபெற்றிருந்ததும், தமது அரசுகள் ஏனைய சமூகங்களை ஆக்கிரமித்து, அவர்களை ஆயிரக் கணக்கில் கொன்றொழித்த போது, அத்தகைய செயலுக்கு தமது ஆதரவை வழங்கி வந்திருக்கின்றார்கள் என்பதும் அதிர்ச்சியளிக்க கூடிய விடயங்களாக இருக்கின்றன. இன்று, ஒருபுறம் பொருளாதாரம், சேவைகள், தொழிநுட்பம், தொடர்பூடகம்..என்பவற்றின் எல்லைகள் கடந்த ஊடுருவலை அடிப்படையாக கொண்டு, உலகமயமாக்கம் என்ற கருத்தாக்கத்தின் கீழ், ஏகாதிபத்திய, நவகொலனித்துவ சக்திகள் தமக்கு வெளியிலுள்ள அனைத்து சமூகங்களின் தனித்துவங்களையும் நிராகரித்து, அவற்றை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர முயற்சிக்கின்றன. மறுபுறம், ஒன்றுக்கு மேற்பட்ட சமூகங்கள் ஒரே அரசின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்ற ஒவ்வொரு சூழலிலும், அந்த அரசை கட்டுப்படுத்துகின்ற சமூகமானது, தன்னை உயர்ந்த, அதிகாரமிக்க சமூகமாக கருதி, ஏனைய சமூகங்களை அடக்கி, நசுக்க முயற்சிக்கின்றன.

ஆயினும் இத்தனை அடக்குமுறைகளையும் ஆக்கிரமிப்புகளையும் வன்முறை அழிப்புகளையும் மீறி, ஒவ்வொரு சமூகமும் தமது தனித்துவத்தை உறுதியுடன் பேணி வந்திருக்கின்றது என்பது அற்புத உண்மையாக உயர்ந்து நிற்கின்றது. பல பழங்குடி மக்களினங்கள் முற்றிலும் இயற்கையுடன் இணைந்த தமது வாழ்க்கை முறையை இன்னமும் பேணி வருகின்றனர் என்பதும், காட்டுமிராண்டிகள் என்ற அடையாளப்படுத்தலின் கீழ், மூர்க்கத்தனத்துடன் அழிக்கப்பட்ட அமெரிக்க, அவுஸ்த்திரேலிய பூர்வீக மக்கள் மீள உயிர்ப்புற்று, தமது தனித்துவங்களுடன் உயர்ந்தெழுகின்றார்கள் என்பதும், வரலாற்று இயக்கத்தால் ஒழித்துக்கட்டப்பட விதிக்கப்பட்டவர்கள் என்று ஊகிக்கப்பட்ட செக் மற்றும் ஸ்லோவ் இன மக்கள் தமக்கென சொந்த அரசுகளை கொண்டிருக்கின்ற தேசங்களாக உருப்பெற்றுள்ளார்கள் என்பதும் ஆரிய தூய்மையை காப்பதற்காக அழித்தொழிக்கப்பட்ட யூதர்கள் தமக்கென சொந்த நாட்டை பெற்றுள்ளார்கள் என்பதும் வியப்பூட்டும் சான்றுகளாக எம்முன் நிற்கின்றன. இவை அனைத்தும் ஒவ்வொரு சமூகத்திலும் உள்ளூறைந்துள்ள தனித்துவ பண்புகள் எவ்வளவு வலிமையானவை, உயிராற்றல்மிக்கவை என்பதை துல்லியமாக வெளிப்படுத்தியிருக்கின்றன. சமூகங்களின் தனித்துவங்களை மறுப்பதற்கும் அழிப்பதற்கும் ஆதிக்க சக்திகளினால் மேற்கொள்ளப்பட்ட அத்தனை முயற்சிகளையும் மீறி, ஒவ்வொரு சமூகமும் பெருமைக்குரிய முறையில் தமது தனித்துவத்தை வேரூன்ற செய்துள்ளன, தமது இயக்கத்தை உறுதியாக தொடர்கின்றன.

இவ்வாறு வரலாற்றுரீதியாகவும் நம் கண்முன்னேயும் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற சமூகங்களின் தனித்துவ இயக்கமானது, பின்வரும் தெளிவான செய்தியை உரத்துச் சொல்கின்றது: அனைத்து சமூகங்களும் சமத்துவமானவை. ஆம்! ஒவ்வொரு சமூகமும் வரலாற்றினூடே தனது தனித்துவத்தை பேணி, தன்னை ஏனைய சமூகங்களிலிருந்து தெளிவான முறையில் வேறுபடுத்தி வந்திருப்பதினூடாக தான் மற்ற சமூகங்களுக்கு முற்றிலும் சமத்தவமானது என்பதை நிரூபித்துள்ளது. ஒவ்வொரு சமூகமும் தனக்குரிய சொந்த பாதையில் தான் எதிர் கொண்ட சகல தடைகளையும் துயரங்களையும் கடந்து தன்னை நிலைநிறுத்தி வந்திருப்பது ஒன்றே, தான் ஏனைய சமூகங்களுக்கு சமத்துவமானது என்பதை நிறுவ போதுமானது. ஒரு சமூகத்தின் கலாச்சார மரபுகள் எத்தகையவை, அதன் நம்பிக்கைகள் எப்படிப்பட்டவை, எவ்வாறான சாதனங்களின் மூலம் அச்சமூகம் தனது உற்பத்தி மற்றும் தொடர்புகளை பேணுகின்றது, அதன் அரசியல் முறைமை எத்தகையவை..போன்ற மதிப்பீடுகள்

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தனித்துவங்களின்...

(6ஆம் பக்க தொடர்ச்சி...)

அனைத்தையும் ஒதுக்கி விட்டு, அது நிலைத்து வந்திருக்கின்றது என்ற ஒரே அம்சத்தின் மூலமாகவே, ஏனைய சமூகங்களுக்கு எவ்விதத்திலும் குறையாத முக்கியத்துவத்தை சமத்துவத்தை அச்சமூகம் பெற்று விடுகின்றது. இவ்வகையில் ஒரு சமூகத்தின் இருப்பு ஒன்றே, அது ஏனைய சமூகங்களுக்கு நிகரான உரிமைகளை கோருவதற்குரிய உறுதியான, இயற்கையான சான்றாக அமைகின்றது.

சிறிலங்கா அரசினால் மறுக்கப்பட்டு வருகின்ற நமது தனித்துவத்தை அரசியல்ரீதியாக நிலைநாட்டுவதற்காக மாபெரும் அர்ப்பணிப்புடன் போராடி கொண்டிருக்கின்ற நாம், மனிதர்களின் தனித்துவங்களை சமமாக கருதுவதில் எவ்வாறு எம்மை வெளிப்படுத்தி வந்திருக்கிறோம்? இக்கேள்விக்கான பதில் எதிர்மறையானதாகவே இருக்கின்றது என்பதை நாம் அறிவோம். ஒருபுறம் நம் மத்தியில் கொடுமையானதும் அவமானகரமானதுமான பிரிவினைகளும் அடக்குமுறைகளும் நிலவி வருகின்றன. நம்மிடையே சாதி அடிப்படையிலும் பாலினரீதியாகவும் பிரதேசரீதியிலும் பிரிவுகளும் படிநிலை வேறுபாடுகளும் மரபாக்கப்பட்டு, நமது மக்களின் பெரும்பாலானோர் மீது அடக்குமுறைகளும் வன்முறைகளும் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. மறுபுறம் பலநூற்றாண்டுகளாக நமக்கருகே ஒரே தாயகத்தில் வாழ்ந்து வருகின்ற முஸ்லிம்கள் தொடர்பாக நம்மிடையே நிலவுகின்ற மதிப்பீடுகளும் அவர்களுடனான நமது உறவுகளும் ஒருபோதும் சமத்துவ அடிப்படையில் அமைந்திருக்கவில்லை. மதம், கலாச்சாரம், நம்பிக்கைகள்.. என்பவற்றின் அடிப்படையிலும் அரசியல்ரீதியிலும் முஸ்லிம்கள் கொண்டிருக்கின்ற தனித்துவமான பண்புகளை நாம் ஒரு போதும் சமத்துவமாக ஏற்றுக் கொள்ளவில்லை. இவற்றின் விளைவுகள் கடுமையானவை, குரூரமானவை. தமிழ் ஆயுத அமைப்புக்கள் முஸ்லிம்களை நூற்றுக்கணக்கில் கொல்வதற்கும் வடக்கிலிருந்து அவர்களை முற்றாக வெளியேற்றுவதற்கும் இவை காரணமாகியுள்ளன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நமது போராட்டத்தின் அர்த்தமானது, அது அடைகின்ற வெற்றியில் மட்டும் தங்கியிருக்கவில்லை. அடிப்படையில், நமது மக்களுக்கிடையிலான உறவுகளிலும், ஏனைய சமூகங்களுடனான நமது உறவுகளிலும் ஏற்படுக்கூடிய புரட்சிகர, ஜனநாயக பண்பிலேயே நமது போராட்டத்தின் உண்மையான அர்த்தம் பொதிந்துள்ளது. இது நமது மக்கள் அனைவரையும் பிற சமூகங்களையும் சமத்துவமாக கொள்கின்ற ஒரு கருத்தியல் மரபு நம் மத்தியில் நிலைநாட்டப்படுவதை கோருகின்றது. இதற்கு முன்நிபந்தனையாக நமது சிந்தனையில் ஒரு புரட்சிகர மாற்றம் நிகழ்வது அவசியமாகின்றது. உண்மையான மக்கள் போராட்டத்தின் சாரமானது, ஆட்சி மாற்றங்களினாலோ, சட்டத் திருத்தங்களினாலோ மட்டும் அளக்கப்படுவதில்லை. அது முதன்மையாக, மக்களின் சிந்தனைகளிலும் அவர்களுக்கிடையிலான சமூக உறவுகளிலும் ஏற்படுகின்ற புதிய பண்புகளினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது.

நமது போராட்டமானது, வரலாற்றில் மதிப்பிற்குரிய இடத்தை பெற்றிருக்கின்றது. அது உலகெங்கும் விடுதலைக்காக போராடி கொண்டிருக்கின்ற சமூகங்களுக்கு புதிய, செழுமையான அனுபவங்களை வழங்கி வருகின்றது. விடுதலைக்கான நமது போராட்டம் மட்டுமல்ல, இப்போராட்டதினூடாக நாம் உருவாக்குகின்ற புதிய சமூக அமைப்பும் கூட, போராட்ட வரலாற்றில் மாபெரும் முன்னுதாரணமாக அமைவதில், நாம் பிரக்ஞைபூர்வமாக பங்கு கொள்வோம். இதை சாத்தியமாக்குவதற்குரிய முதல் நிபந்தனையாக, மனிதர்களிடையே வெளிப்படுகின்ற தனித்துவங்களை அவர்களின் பிறப்புரிமையாகவும் அவற்றை சமத்துவமாகவும் கொள்கின்ற கருத்தியல் மரபை எம்மத்தியில் பிரக்ஞைபூர்வமாக உருவாக்குவோம். நம்மிலிருந்து ஒருவர் வேறுபடுகின்றார் என்ற உண்மையானது, மறுதலையாக, அவரிடமிருந்து நாம் வேறுபடுகின்றோம் என்ற உண்மையையும் சுட்டி காட்டுகின்றது என்பதை புரிந்து கொள்வோம். இத்தகைய புரிதல் தனித்துவங்களை சமத்துவமாக கொள்கின்ற மனோபாவமும் நடைமுறை வழக்கும் நம்மத்தியில் மரபாக நிறுவப்படுவதற்குரிய சாத்தியத்தை விரைவுபடுத்தும்.

-வரதன்

## மக்கள் களம்

அன்புடையீர்!

அண்மைக்காலத்தில்தான் உங்கள் பத்திரிகைகள் கிடைத்தன. ஆழமான வாசிப்பு செய்தேன். இரண்டு விடயங்களை தெரிவிக்க வேண்டும். ஒன்று தற்போதுள்ள குறிப்பான சூழலில், உங்கள் பத்திரிகையில் வரும் அரைவாசிக்கும் மேற்பட்ட விடயங்கள் பலரின் உடனடிக் கவனத்தை ஈர்க்காது. எனினும் அவை அவசியமானவை. அவ்வாறான கோட்பாட்டுத்தேவைகளை விட உடனடி நிகழ்வுகளில் தான் மிகப்பெரும்பாலானவர்களின் கவனம் தற்போது உள்ளது. ஆனாலும் தேசத்தின் ஒட்டுமொத்த தேவைகள் தொடர்பான கோட்பாட்டு விடயங்கள், நடைமுறை சார்ந்த விடயங்களை நீங்கள் பொறுமையாக உரியகாலம் வரும் வரை செய்து கொண்டு செல்லத்தான் வேண்டும் என்பது எனது கருத்து.

இரண்டாவதுவிடயம், நம்தேசம் ஒரு மாறும் கட்டத்தில் உள்ளது. ஏதாவது ஒரு விடிவு பிறக்கும். அதற்கு முன்னர் தேசம் மிகவும் கடுமையான துன்பங்களையும் அழிவுகளையும் வெற்றிகளையும் அனுபவிக்கும் இக்காலகட்டத்தில் தமிழீழத்திலுள்ள நம்மக்கள் அனைவரும் அதற்கு தாக்குப்பிடித்து போராட்டத்தை பலபடுத்தி வருகின்றனர். கிடைக்கின்ற வளங்களைக்கொண்டு தமது இருப்பையும் தற்காத்துக்கொண்டு போராட்டத்திலும் தமக்கு முடிந்த பங்களிப்பை தந்து வருகின்றனர். இந்த கொந்தளிப்புக்கும் இழப்புகளுக்கும் பின்பு அடுத்த சுதந்திர கால கட்டம் வரும். அப்போது புலம்பெயர் நாடுகளில் இருந்து பெரும் மூலதனங்களும், மூளைசாலிகளும் தமிழீழத்தில் வந்திறங்கும்போது, அப்பிரிவினருக்கும், தற்போது தமிழீழத்தில் வதிந்து வருபவர்களுக்கும் இடையே தேசநிர்மாணம் தொடர்பாக பல்வேறு முரண்பாடுகள், மோதல்கள் ஏற்படும் சாத்தியம் நிறைய உள்ளது. விடுதலைப்போராட்டததின் பலாபலன்கள் அனைவருக்கும் சமமாக கிடைக்க முடியாது ஒரு அவலநிலைக்கும் இது கொண்டு போகலாம் என்ற அச்சம் சமூக அக்கறையுள்ளவன் என்றவகையில் எனக்கு உள்ளது.. இதைப்பற்றிய எச்சரிக்கை அனைருக்கும் தேவை. இதனை கவனிக்க தவறினால் தேசம் அதன் சுதந்திரத்தின் ஆரம்ப கட்டத்திலேயே தனக்குள் அடிபட்டு இரத்தம் சிந்தி தன்னைத்தானே பலவீனப்படுத்திக்கொள்ள நேரிடும். நம்மைச்சுற்றியுள்ள எதிரிகளின் கனவும் அதுவாகவே உள்ளது. இதற்கு ஒருபோதும் நாம் இடமளிக்க கூடாது.

**சத்தியலிங்கம், திருகோணமலை**

## அரசியல் யாப்பு...

(முதலாம் ஆம் பக்க தொடர்ச்சி...)

அரைவாசியாக்கப்பட்ட 97 தீர்வுப்பொதியை, புதிய அரசியல் யாப்பிற்குள் புதைத்து சகல படைப்பலத்தின் துணையுடன் சந்திரிகா முன்வைத்துள்ளார். துப்பாக்கி கொண்டு தான் நினைத்ததை சாதிப்பதாக மிரட்டுகின்றார். எம்மையெல்லாம் ஏமாற்றி, உலகையும் ஏமாற்றி, போரை உக்கிரப்படுத்தி வெற்றியை பெற்று, நம் தேச இருப்பையும் அழிக்கமுடியா தமிழ்தேசிய இறைமையையும் நிர்மூலம் செய்து விடலாம் என சந்திரிகா எவ்வளவு இனிமையான கனவைக் காண்கின்றார்.

சிங்கள தேசத்திலுள்ள தனக்கு ஆதரவான பல சக்திகளை கூட, கடந்த காலத்தில் சந்திரிகாவின் வெற்றிக்காக பாடுபட்ட பல தாராண்மைவாத சக்திகளைக்கூட, ஒருமித்த கருத்திற்கு கொண்டு வரமுடியாத அளவிற்கு சந்திரிகாவின் அதிகார வெறியானது தீவிரமடைந்துள்ளது. இதற்கு மேல், நமது பிரச்சனையெல்லாம் அவருக்கும் அவரது அரசிற்கும் புரிந்துகொள்வதற்கே பல வருடங்கள் செல்ல வேண்டியிருக்கும். அதுவரைக்கும் நமது விடுதலையையும் சுதந்திரத்தையும் தள்ளிப்போட எந்தஅவசியமும் நமக்கு கிடையாது.

சந்திரிகாவின் பிரதான இலக்குகள்: ஆட்சிஅதிகாரத்தை இன்னும் 12 வருடங்கள் சுவைப்பது: சர்வதேச அபிப்பிராயத்தை மீண்டும் தன்பக்கம் வெல்ல நினைப்பது: தமிழ்தேசத்தை பிளவுபடுத்துவது: போரை உக்கிரப்படுத்தி விடுதலைப் போராட்டத்தை அழித்தொழிப்பது: நம்தேசிய இருப்பையும் நம்மை நாம் ஆளும் இறைமையையும் நிர்மூலம் செய்வதுதான். அன்றும் இன்றும் இனியும் இவைதான் என்பது நமக்கு தெளிவிலும் தெளிவாகும். அவ்வாறாயின் நாம் என்ன செய்வது ?

எந்தவித மயக்கதிற்கும் இடமில்லாது இந்த அரசியல்யாப்பையும், அதனுள் புதைக்கப்பட்டிருக்கும் தீர்வுப்பொதியெனும் பாரியமோசடியையும் ஒட்டுமொத்தமாக நிராகரிப்பதுதான், ஒரே தேசமாய், நமக்குள் இருக்கும் இடைவெளிகள் அற்ப முரண்பாடுகளை ஒருபுறம் வைத்துவிட்டு, ஏகமனதாய் நிராகரித்து விடுவதே. என்னென்ன வடிவங்களிலாயினும், எந்தெந்த வளங்களை பயன்படுத்தியென்றாலும் நாம் எந்த தளத்தில் இருந்தாலும் நமது உணர்வுகள் தமிழீழத்துடன் பிணைந்திருக்கட்டும். தமிழக தற்காலிக வதிமுகாம்களாகட்டும், ஐரோப்பாவிலாகட்டும், வட-அமெரிக்க கண்டமாகட்டும் எங்கிருந்தாலும், ஒரே மனத்துடன் எந்தவித மயக்கத்திற்கும் தயக்கத்திற்கும் இடமின்றி இந்த யாப்பை நிராகரிக்க வேண்டும். கடுமையான பலத்த எதிர்ப்பை நாம் வெளிப்படுத்த வேண்டும். இதன் மூலம் உலகச் சமூகத்தின் மனசாட்சியை மட்டுமல்ல, சிங்கள தேசத்தின் மத்தியிலுள்ள பெரும்பான்மையானவர்களின் மனசாட்சியையும் கூட நாம் உலுப்ப வேண்டும். ஏன் இப்படி? என அவர்களையும் கூட நாம் சிந்திக்க வைக்க வேண்டும். அவ்வாறு சிந்திக்க வைக்கும் அளவிற்கு நமது ஒற்றுமையை என்றுமில்லாத அளவிலும் பண்பிலும் வெளிப்படுத்துவோம் எனின் நமது விடுதலை, நமது சுதந்திரம், நமது சுயநிர்ணயம் அடையப்படுவது திண்ணம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# தமிழீழம்

'The Editor'
BM Box 4002
London. WC IN 3XX
United Kingdom

www.thamileelam.org
info@thamileelam.org


## புதிய அரசியல் யாப்பையும் நிராகரிப்போம்!
## ஒரே குரலில்!

நமது இலட்சியம் இறைமை கொண்ட சுதந்திரதமிழீழம்.

நாம் இந்த முடிவினை வந்தடைந்தது ஏன்? இந்த முடிவினை மாற்றுவது பற்றி சிந்திக்க முனைவது ஒருபுறம் இருக்க இம்முடிவினை மறுபரிசீலனை செய்வதற்கும் கூட, இன்று அவர்களால் முன்வைக்கப்பட்டிருக்கும் புதிய அரசியல் யாப்பில் அப்படி என்னதான் கிடக்கின்றது?

நமது தேசியப்பிரச்சனைக்கான மூல காரணிகள் எவை? அவற்றை இந்த அரசியல்யாப்பும் அதனுள் கிடக்கும் பொதியும் அடையாளங் கண்டுள்ளதா? சிங்கள முப்படை, சிங்கள பொலீசுப்படை, சிங்கக் கொடி, சிங்கள பௌத்த குடியரசு, சிங்கள சட்டவாக்க மன்றம், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் இவற்றில் எல்லாம் ஏதாவது மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதா? ஈழத்தமிழர் தனியான தேசம், சுயநிர்ணய உரிமை, அவர்களுக்கும் தேச அரசமைக்கும் இறைமை உண்டு இப்படி ஏதாவது மேலோட்டமாகத்தானும் பேசப்பட்டுள்ளதா? பிராந்திய சபையாம் பிராந்தியசபை! இன்னும் சபை என்ற கருத்தாக்கத்தை தாண்ட முடியாத அரசியல் மண்டுகங்கள் இவர்கள்! அவர்களைப்போலவே, அவர்களின் புதிய அரசியல்யாப்பிலும் தீர்வுப் பொதியிலும், இப்படி எதுவுமே கிடையாது. எனின் இதுபற்றி நாம் ஏன் அலட்டிக்கொள்ள வேண்டும்?

நமது உண்மையான அடிப்படையான அரசியல் தேவை என்னவென்பதை துல்லியமாக வெளிப்படுத்திவிடுவோம். இதுவே தமிழீழ மக்கள் கட்சியின் ஒரே கோரிக்கை. தேசத்தின் ஈடு இணையற்ற போராட்ட வரலாற்றை நாம் கொச்சைப்படுத்தாது நமது நண்பர்களுக்கு மட்டுமல்ல நமது எதிரிகள் முகாமுக்கும் கூட எமது அரசியல் அபிலாசைகள் என்னவென்பதை குழப்பத்திற்கும் சந்தேகத்திற்கும் இடமின்றி, மீளவும் ஒருமுறை தெளிவாகவும் உறுதியாகவும் வெளிப்படுத்தி விடுவோம்.

அடக்குமுறைக்கும் போராட்டத்திலும் பலியாகியும் தம்மை அர்ப்பணித்தும் விட்ட மக்களுக்கும் போராளிகளுக்கும் இன்றிருக்கின்ற இனி வரப்போகின்ற தலைமுறையினருக்கும் நாம் ஆற்றும் வரலாற்றுக்கடமை இதுதான்.

உண்மையாக தேசியப்பிரச்சனையை தீர்க்க முயலும் எவரும் குறைந்தபட்சம், அதற்கான அறிகுறிகளை முதலில் காட்ட வேண்டும். சந்திரிகாவின் ஆணையின் கீழ் தொழிற்படும் இந்த ஆக்கிரமிப்பு படைகள் தொடர்ச்சியாக நமக்கு செய்துவருகின்ற தீங்குகளை பாருங்கள். கைதுகளும் வதைகளும் கொலைகளும் நாளுக்கு நாள் அதிகரித்தே செல்கின்றன. இயற்கை வளங்கள் திட்டமிட்டு மேலும் மேலும் அழிக்கப்படுகின்றன. இன்னும் கூட திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் ஆங்காங்கு மேற்கொள்ளப்படுகின்றன. நமது நிராகரிப்பு முடிவு முற்றிலும் சரிதான் என இவை எமக்கு மீளவும் மீளவும் நிரூபிக்கின்றன.

ஆக, நமது தேசத்துக்கு இன்று தேவையானது, அவசியம் தேவையானது ஒற்றுமை, கெட்டியான பலம். இந்த ஒற்றுமையையும் பலத்தையும் உருவாக்குவதற்கு, சிங்கள படைகளை தோற்கடிப்பதால் ஏற்படும் மகிழ்ச்சியை, ஒன்றிணைந்து போராட்டத்தின் பால் உறுதியாக, சஞ்சலமின்றி நிற்பதில் நமது தேசம் வெளிப்படுத்த வேண்டும். இதற்கு போராட்டத்தில் பலமான சக்தியாக தன்னை நிரூபித்து நிற்கும் விடுதலைப்புலிகள் ஒரே தேசமாக சமூக சக்திகளை அணிதிரட்டுவதற்கு மக்கள்பால் கொள்ள வேண்டிய அக்கறையுடனான அணுகுமுறை இன்னும் எவ்வளவோ முன்னேற வேண்டியுள்ளன.

நம்மக்கள் மத்தியில் எமது இலட்சியங்கள் பற்றித் தெளிவும் உறுதியும் மேலும் அதிகரிக்க வேண்டும். மக்களையும் சமூக சக்திகளையும் ஒன்றிணைப்பதும், அதற்கான சூழலை உருவாக்குவதும், போராட்டத்தை புரிந்து கொண்டு விடாப்பிடியாக முன்னெடுப்பவர்களின் கடமையாகும். போராட்டத்தின்பால் தெளிவும் கரிசனையும் கொண்ட அனைத்துச்சக்திகளினதும் கடமையாகும். இதுவே இன்றைய வரலாற்றுக் கடமையாகும்! இந்த விடயங்களில் நம் ஒவ்வொருவரதும் கடமையை உணர்ந்து சரிவர ஆற்றுவோம் எனின், வரலாறு நம்மை சரியென நிரூபிக்கும்! நம் வெற்றி நிச்சயம் என்றும் அழியாத்தடம் பதிக்கும்.

மீண்டும் மீண்டும் உறுதி பூணுவோம், நம்தேசத்தை எந்த சக்தியாலும் பிரிக்க பிளவுபடுத்த முடியாதபடி ஒற்றுமையையும் அதற்கான சூழலைப் பேணுவோமென!


வட அமெரிக்கத் தொடர்புகட்கு:
300 Borough Dr.,
PO Box 47032
Scarborough,On.
M1P 4ZP
Canada

ஐரோப்பியத் தொடர்புகட்கு:
'The Editor'
BM BOX 6769
LONDON
WCI 3XX, U.K.
Tel: 07041372064


## நம் தேச வளங்களை நாசம் செய்யும்
## சிங்களப்படைகள்!



வயலும் நெல்லும், பனையும் தென்னையும், கால்நடைகளும் காட்டுத் தொழில்களும், மீன்களும் வள்ளமும் நம்தேசத்தின் ஆதாரவளங்களாகும். நம் தேச இருப்பின் ஆணிவேர்களாகும். இந்த அடிப்படைகளை தகர்ப்பது சிறிலங்கா எதிரிப்படைகளின் பிரதான செயலாக மாறியுள்ளது.

சிறிலங்கா ஆக்கிரமிப்புப்படைகள் அண்மைக்காலமாக பெருமளவில் நம்தேசவளங்களை நாசம்செய்து வருகின்றன. பாதுகாப்புக்காரணங்களைக் கூறிக்கொண்டு தென்தமிழீழ நெடும்பாதையோர மரங்களையும் காடுகளையும் வெட்டிச்சரித்து வந்த படைகள் தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள பனை மற்றும் தென்னைகளை ஆயிரக்கணக்கில் தறித்து வருகின்றன. இதுவரை பாதுகாப்பு அரண்களமைக்க வென நாசவேலை செய்து வந்த எதிரிகள், தற்போது, தாம் துரத்தியடிக்கப்படும் காலம் நெருங்குவதை அறிந்து பிரக்ஞைபூர்வமாகவே நம்தேசவளங்களை அழித்தொழிப்பதில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறாக வளங்களை அழிக்க வேண்டும் என படைத்தலைமைகளால் கீழணியினருக்கு தெளிவாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக பெண்பனைகளையே பெருமளவு வெட்டிச்சரித்து வருவது திட்டமிட்ட அவர்களின் செயற்பாடுகளை துல்லியமாக்குகின்றது.

சமகாலத்தில் தென்தமிழீழத்திலும் கால்நடை வளங்களை அழித்தொழிக்க, அவற்றின் மேச்சல்நிலங்களுக்கு தடைபோட்டனர். நெற்பயிர் செய்கை செழிக்கும் காலங்களில் சிறு பாலங்களையும், மதகுகளையும் தகர்த்து உழவுயந்திரங்களதும் மாட்டு வண்டிகளதும் போக்குவரத்தை தடுத்து விவசாயப்பொருட்களின் போக்குவரத்துகளையும் உழவுவேலைகளையும் தடைசெய்துள்ளனர். நம்மக்களின் மீன் பிடித்தொழிலுக்கு கடந்த 17 வருடங்களாக சிறிலங்கா கடற்படையினரும் வான்படையினரும் இழைந்து வரும் சேதம் சொல்லிடங்காது.

தோற்றோடத்தயாராகும் எல்லா ஆக்கிரமிப்பு படைகளையும் போலவே, இப்படைகளும் தாம் விரட்டியடிக்கப்படுவதனை உறுதியாக தெரிந்து கொண்டு, நம் தேசத்தினை காலகாலத்திற்குமாக பலவீனப்படுத்தி விடலாமென, பஞ்சத்திற்குள் தள்ளிடலாமென இந்த அழிவுகளை மேற்கொண்டு வருகின்றன. யாழ்ப்பாணத்தையும் தமிழ் மக்களையும் பாதுகாப்பதாக பிரச்சாரப்படுத்தி வரும் சந்திரிகாவின் படைகளின் அழிவுச்செயல்கள் தற்போது முற்றிலும் வெட்டவெளிச்சமாகிவிட்டது.

மொத்தத்தில் தமக்கு விரைவில் தோல்வி என்பதை நன்குணர்ந்து கொண்டுள்ள எதிரிகள், நம்தேசம் சுதந்திரம் பெற்று செழிப்பான வாழ்விற்குள் நுழைய விடாது தடுக்கவே இந்த நாசகார செயல்களில் திட்டமிட்டு மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

இலங்கைத்தீவிலுள்ள பனைகள் மொத்தம் ௰ இலட்சம்
இவற்றில் பெரும்பகுதி வடதமிழீழத்தில் உள்ளது.
இதில் ௨௫ இலட்சம் பனைகள் இதுவரை படைகளால் தறிக்கப்பட்டுள்ளன.
ஜனவரி தொடக்கம் மார்ச் வரை ௨0000 அதிகமான பனை, தென்னை எதிரிப்படைகளால் தறிக்கப்பட்டுள்ளன.
ஏப்ரல் மாதம் ஒரு வாரத்தில் மட்டும் வளமுள்ள தென்னைகள் ௨௫0 தறிக்கப்பட்டுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்